# PONDICHERRY UNIVERSITY

(A Central University)



# SRI SUBRAMANIA BHARATHI SCHOOL OF TAMIL LANGUAGE & LITERATURE

## SYLLABUS

## (CBCS)

## M.A. Tamil

## From the Academic Year 2021 – 2022 onwards

# புதுவைப் பல்கலைக்கழகம்
# சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
## [முதுகலைத் தமிழ்ப் பாடத்திற்கான விதிமுறைகள்]

இந்தியப் பாராளுமன்றத்தில் **1985** அக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் புதுச்சேரியில் பல்கலைக் கழகம் அமைக்க மத்திய அரசு முடிவு எடுத்தது; அவ்வாறு தோற்றுவிக்கப்பெற்ற புதுவைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பெற்ற இரண்டு புலங்களில் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலமும் ஒன்றாகும். இத்தமிழியற்புலத்தில் முதுகலைத் தமிழிலக்கியம் பயிற்றுவிக்கப்பெறுகிறது.

**பாடத் திட்டத்தின் நோக்கம்**

தமிழ் மொழியின் முதல் நூலான தொல்காப்பியம், பழந்தமிழ் இலக்கியங்கள் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரையுள்ள நூல்கள் தொடர்பான அடிப்படைப் புரிதல்களை உருவாக்கும் வண்ணம், முதுகலைப் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் முழுமையும் நான்கு பருவங்களிலும் கற்பிக்கப்பெறுகிறது. சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நவீன இலக்கியம்(இரண்டு பருவங்கள்), ஒப்பிலக்கியம், இந்திய இலக்கியம், உலக இலக்கியம், இலக்கியத் திறனாய்வு, நாட்டுப்புறவியல் முதலான அடிப்படைப் பாடங்கள்(Hard core) பிறதுறைகள் மற்றும் நவீனக் கோட்பாடுகள் சார்ந்த அருந்துணைப்பாடங்களும்(Soft core) முதுகலைப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

மரபிலக்கியம், நவீன இலக்கியம், நவீனக் கோட்பாடுகள் எனப் பல்வேறு நிலைகளிலும் தமிழ் மாணவர்கள் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்கிற நோக்கத்தின் அடிப்படையில் முதுகலைப் பாடப் பிரிவுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**முதுகலையில் சேர்வதற்கான தகுதிகள்**

அகில இந்திய அளவில் நடத்தப்படும் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறுவதன் மூலம் மாணவர்கள் முதுகலைத் தமிழ்ப் பாடத்தில் சேரலாம். முதுகலையில் சேர விரும்பும் மாணவர்கள் தமிழ் இளங்கலையில் 50% மதிப்பெண்களுடன் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். SC, ST மாணவர்கள் தமிழ் இளங்கலையில் தேர்ச்சியடைந்திருந்தால் போதுமானது.

பிற துறை சார்ந்த இளங்கலை, இளம் அறிவியல் பட்டப்படிப்பு பயின்ற மாணவர்கள் பகுதி ஒன்று மொழிப்பிரிவில் தமிழைப் பாடமாகப் பயின்றிருக்க வேண்டும். எனினும், புதுவைப் பல்கலைக்க கழகம் நடத்தும் நுழைவுத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் தகுதி அடிப்படையிலேயே முதுகலையில் சேர்த்துக் கொள்ளலாம்.

**காலம்**

முதுகலைப் பாடம், பொதுவாக, நான்கு பருவங்களின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகள் நடைபெறும். தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள், ஏதோ தவிர்க்க முடியாத சூழலில் தேர்வு எழுதாத மாணவர்கள் ஆகியோருக்கு அதிகபட்சமாக நான்கு ஆண்டுகள், அதாவது எட்டுப் பருவங்கள் தேர்வு எழுதுவதற்கு வாய்ப்பு வழங்கப்பெறும். அந்த பருவங்களுக்குள் முதுகலைக்குரிய தேர்வினை எழுதி தேர்ச்சி பெற வேண்டும். அதன் பிறகு வாய்ப்புகள் வழங்கப்படமாட்டா.

**மொழி**

அனைத்துப் பாடங்களும் தமிழ்வழி மூலமாகப் பயிற்றுவிக்கப்படும்.

**தேர்ச்சிக்குரிய மதிப்பும் வரையறையும்**

முதுகலைத் தமிழில் பயிற்றுவிக்கப்படும் ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று மதிப்புகள் (3 credits). மாணவர்கள் முதுகலைத் தமிழ் பட்டம் பெற வேண்டுமெனில் 72 மதிப்புகளைப் (72 credits) பெற்று அவர்கள் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும்.

இதில் அடிப்படைப் பாடங்களுக்கு (Hard core) 48 மதிப்புகள். ஒவ்வொரு பருவத்திற்கும் நான்கு பாடங்கள் என மொத்தம் 16 பாடங்கள். அருந்துணைப்பாடங்களுக்கு 24 மதிப்புகள். ஒவ்வொரு பருவத்திற்கும் இரண்டு பாடங்கள் என மொத்தம் எட்டுப் பாடங்கள்.

| | | |
|---|---|---|
| அடிப்படைப் பாடங்கள் | 16x3 = | 48 |
| அருந்துணைப் பாடங்கள் | 8x3 = | 24 |
| மொத்தம் | | 72 |

**வயது வரம்பு**

புதுவைப் பல்கலைக்கழகம் பிற முதுகலைப் பாடத்திற்கு நிர்ணயித்திருக்கும் அதே வயது வரம்பு பின்பற்றப்படும்.

**தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்**

பட்டம் பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண்,தேர்வு முறைகள், தகுதி முதலியன புதுவைப் பல்கலைக்கழத்தில் இப்பொழுது பின்பற்றப்பெறும் CBCS விதிமுறைகளின் படி அமையும்.

**M.A.Tamil**
**Course structure**

## Semester I

| | Code | Course Title | | Credits |
|---|---|---|---|---|
| 1 | TAML411 | தொல்காப்பியம் –எழுத்து | Hard Core | 3 |
| 2 | TAML412 | அற இலக்கியம் | Hard Core | 3 |
| 3 | TAML413 | பக்தி இலக்கியம் | Hard Core | 3 |
| 4 | TAML414 | நவீன இலக்கியம் -I | Hard Core | 3 |
| 5 | TAML415 | சமூகவியலும் இலக்கியமும் | Soft Core | 3 |
| 6 | TAML416 | தமிழில் பெண் இலக்கியங்கள் | Soft Core | 3 |
| | | | **Total Credits** | **18** |

## Semester II

| | Code | Course Title | | Credits |
|---|---|---|---|---|
| 1 | TAML421 | தொல்காப்பியம் –சொல் | Hard Core | 3 |
| 2 | TAML 422 | ஒப்பிலக்கியம் | Hard Core | 3 |
| 3 | TAML423 | காப்பியம் | Hard Core | 3 |
| 4 | TAML425 | பிரபந்தம் | Hard Core | 3 |
| 5 | TAML426 | மார்க்சியமும் இலக்கியமும் | Soft Core | 3 |
| 6 | TAML427 | மானிடவியலும் இலக்கியமும் | Soft Core | 3 |
| | | | **Total Credits** | **18** |

## Semester III

| | Code | Course Title | | Credits |
|---|---|---|---|---|
| 1 | TAML531 | தொல்காப்பியம் –பொருள் | Hard Core | 3 |
| 2 | TAML532 | சங்க இலக்கியம் | Hard Core | 3 |
| 3 | TAML533 | நாட்டுப்புறவியல் | Hard Core | 3 |
| 4 | TAML534 | இந்திய இலக்கியம் | Hard Core | 3 |
| 5 | TAML535 | சித்தர் இலக்கியம் | Soft Core | 3 |
| 6 | TAML536 | பின்னைக்கோட்பாடுகள் | Soft Core | 3 |
| | | | **Total Credits** | **18** |

## Semester IV

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | TAML541 | தொல்காப்பியம் –பொருள் | Hard Core | 3 |
| 2 | TAML542 | இலக்கியத் திறனாய்வு | Hard Core | 3 |
| 3 | TAML543 | நவீன இலக்கியம் | Hard Core | 3 |
| 4 | TAML544 | உலக இலக்கியம் | Hard Core | 3 |
| 5 | TAML545 | பல்துறை இணைவாய்வு | Soft Core | 3 |
| 6 | TAML546 | நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் | Soft Core | |
| | | **Total Credits** | | **18** |

**அடிப்படைப் பாடங்கள் (16 x 3 =48)**

**அருந்துணைப் பாடங்கள் (8 x 3 = 24)**

## Hard Core Courses (அடிப்படைப் பாடங்கள்)

| | | |
|---|---|---|
| TAML – 411 | | தொல்காப்பியம் – எழுத்து (THOLKAAPIAM – EZHUTHU) |
| TAML – 412 | | அற இலக்கியம் (DIDACTIC LITERATURE) |
| TAML – 413 | | பக்தி இலக்கியம் (DEVOTIONAL LITERATURE) |
| TAML – 414 | | நவீன இலக்கியம் - I (MODERN LITERATURE – I) |
| TAML – 421 | - | தொல்காப்பியம் – சொல் (THOLKAAPIAM – SOL) |
| TAML – 422 | - | ஒப்பிலக்கியம் (COMPARATIVE LITERATURE) |
| TAML – 423 | - | பிரபந்தம் (PRABANTHAM) |
| TAML – 424 | - | காப்பியம் (EPICS) |
| TAML – 531 | - | தொல்காப்பியம் – பொருள் (1-5 இயல்கள்) (THOLKAAPIAM – PORUL (1-5 IYALKAL) |
| TAML – 532 | - | சங்க இலக்கியம் (SANGAM LITERATURE) |
| TAML – 533 | - | நாட்டுப்புறவியல் (FOLKLORE) |
| TAML – 534 | - | இந்திய இலக்கியம் (INDIAN LITERATURE) |
| TAML – 541 | - | தொல்காப்பியம் – பொருள் (6-9 இயல்) THOLKKAPIAM – PORUL (6-9 IYAL) |
| TAML – 542 | - | இலக்கியத் திறனாய்வு (LITERARY CRITICISM) |
| TAML – 543 | - | நவீன இலக்கியம் II (MODERN LITERATURE - II) |
| TAML – 544 | - | உலக இலக்கியம் (WORLD LITERATURE) |

## Soft Core Courses (அருந்துணைப் பாடங்கள்)

| | | |
|---|---|---|
| TAML – 415 | - | சமூகவியலும் இலக்கியமும் (SOCIOLOGY AND LITERATURE) |
| TAML – 416 | - | தமிழில் பெண் இலக்கியங்கள் (WOMEN'S LITERATURE IN TAMIL) |

| | | |
|---|---|---|
| TAML – 417 | - | மொழித்திறன் (LANGUAGE SKILLS) |
| TAML – 418 | - | நாட்டுப்புற விளையாட்டுகள் (FOLK GAMES) |
| TAML – 419 | - | பாரதியார் (BHARATHIYAR) |
| TAML – 425 | - | மார்க்சியமும் இலக்கியமும் (MARXISM AND LITERATURE) |
| TAML – 426 | - | மானிடவியலும் இலக்கியமும் (ANTHROPOLOGY AND LITERATURE) |
| TAML – 427 | - | செம்மொழித் தமிழ் (CLASSICAL TAMIL) |
| TAML – 428 | - | இலக்கியத்தில் தொன்மம் (MYTH IN LITERATURE) |
| TAML – 429 | - | பாரதிதாசன் (BHARATHIDASAN) |
| TAML – 535 | - | சித்தர் இலக்கியம் (SIDDHA LITERATURE) |
| TAML – 536 | - | பின்னைக் கோட்பாடுகள் (POST MODERN THEORY) |
| TAML – 537 | - | தலித் இலக்கியம் (DALIT LITERATURE) |
| TAML – 538 | - | சுவடியியல் (MANUSCRIPTOLOGY) |
| TAML – 539 | - | பெரியார் (PERIYAR) |
| TAML – 545 | - | பல்துறை இணைவாய்வு (MULTI DISCIPLINARY CRITICISM) |
| TAML – 546 | - | நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் (FOLK THEORIES) |
| TAML – 547 | - | தமிழ்ச் சிறுபத்திரிகை வரலாறு (HISTORY OF TAMIL LITTLE JOURNALS) |
| TAML – 548 | - | ஊடகவியல் (MEDIA) |
| TAML – 549 | - | அயோத்திதாசர் (Ayothidhasar) |

# SEMESTER – I

## Hard Core Courses (அடிப்படைப் பாடங்கள்)

TAML – 411 தொல்காப்பியம் – எழுத்து (THOLKAAPIAM – EZHUTHU)

TAML – 412 அற இலக்கியம் (DIDACTIC LITERATURE)

TAML – 413 பக்தி இலக்கியம் (DEVOTIONAL LITERATURE)

TAML – 414 நவீன இலக்கியம் - I (MODERN LITERATURE – I)

## Soft Core Courses (அருந்துணைப் பாடங்கள்)

TAML – 415 - சமூகவியலும் இலக்கியமும்
(SOCIOLOGY AND LITERATURE)

TAML – 416 - தமிழில் பெண் இலக்கியங்கள்
(WOMEN'S LITERATURE IN TAMIL)

TAML – 417 - மொழித்திறன் (LANGUAGE SKILLS)

TAML – 418 - நாட்டுப்புற விளையாட்டுகள் (FOLK GAMES)

TAML – 419 - பாரதியார் (BHARATHIYAR)

# தாள் : தொல்காப்பியம் – எழுத்ததிகாரம்

**பாடத்திட்டம்**

**பாட எண் : TAML 411** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் ( 3 Credits)**

**பாடநோக்கம்** : தமிழ் எழுத்திலக்கணத்தைத் தொல்காப்பியம் வழி நின்று பயிற்றுவித்தல்

**அலகு – 1 : அறிமுகம்**

எழுத்திலக்கண நூல்களை அறிமுகம் செய்தல் – தொல்காப்பியம் முழுமையும் பொதுவாக அறிமுகம் செய்தல் – பாயிரத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுதல் – அதிகார அமைப்புகள் மற்றும் இயலமைப்புகளை விளக்குதல்.

**அலகு – 2 : நூன்மரபு**

எழுத்துக்களின் வகை – முதலெழுத்துக்கள் – சார்பெழுத்துக்கள் – மாத்திரை அளவுகள் -எழுத்துக்களின் வடிவங்கள்- மயக்கம்

**அலகு – 3 :மொழிமரபு**

மொழி மரபு – சார்பெழுத்துக்கள் – தனிமொழி – தொடர்மொழியில் நிற்கும் நிலைகள் – ஆய்தத்தின் சிறப்பியல்புகள் – எழுத்துக்கள் மொழியாகும் நிலைகள் – எழுத்துக்களின் இயக்கம் – மொழி முதல் இறுதி எழுத்துக்கள்.

**அலகு – 4 : பிறப்பியல்**

எழுத்துக்களின் பொதுப் பிறப்புக்கள் – தலை, மிடறு, நெஞ்சு ஆகியவற்றில் காற்றுப்படுதலால் எழுத்துக்கள் பிறக்கின்ற நிலை – உயிரெழுத்துக்களின் பிறப்புக்கள் – மெய்யெழுத்துக்களின் பிறப்புக்கள் – சார்பெழுத்துக்களின் பிறப்புக்கள்.

**அலகு – 5 :புணரியல்**

மொழிகளின் முதலும் ஈறும் – புணர்ச்சிக்குரிய இருமொழிகளின் இயல்புகள் – புணர்தலின் இயல்புகள் – இருவகைப் புணர்ச்சிகள் – உருபுப் புணர்ச்சியின் பொது இயல்புகள் – சாரியைப் புணர்ச்சியின் பொது இயல்புகள் – எழுத்துச் சரியைகள் – உயிரெழுத்தில் புணர்ச்சி இயல்புகள் – புணர்ச்சியில் பொருள் வேறுபடுமிடங்கள்.

**அலகு – 6 :தொகைமரபு**

உயிரீறு மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சிகள் – மெல்லினம் தோன்றுமிடம் – வருமொழி இயல்பாதல் – உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சிகள் – முன்னிலை வினைச் சொல் முடிபு – உயர்திணைப் பெயர் புணர்நிலைகள் – மூன்றாம் வேற்றுமை முடிபுகள் – இரண்டாம் வேற்றுமைத் திரிபுகள் – ஏழாம் வேற்றுமை முடிபுகள் – நெடில் குறில் முன் ஒற்றுக்கள் – ஒற்று இரட்டாத இடம் – அளவுநிறை எண்ணுப்பெயர்கள் – யாவர், யாது என்னும் சொற்களின் மரூஉ நிலைகள்.

**அலகு – 7 : உருபியல்**

உயிரீறுகள் – மெய்யீறுகள் – முற்றுகர, குற்றுகர ஈறுகள்.

**அலகு – 8 : உயிர் மயக்கம்**

அகர ஈறுகள் – அல்வழியில் அகர ஈற்றுச் சொற்கள் – இகர ஈற்றுப் புணர்ச்சிகள் – ஈகார ஈற்றுப் புணர்ச்சிகள் – உகர ஈற்றுப் புணர்கள் – ஊகார ஈற்றுப் புணர்ச்சிகள் – இகார, ஓகார ஈற்றுப் புணர்ச்சிகள் – ஔகார ஈற்றுப் புணர்ச்சிகள்.

**அலகு – 9 :புள்ளி மயங்கியல்**

மெல்லொற்று ஈறுகள் – இரு வழியிலும் ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் – வேற்றுமையில் னகர ஈறு – வேற்றுமையில் மகர ஈறுகள் – வேற்றுமையில் உயர்திணை விரைவுப் பெயர்கள் – வேற்றுமையில் னகர ஈறுகள் இடையொற்று ஈறுகள் – வேற்று அல்வழியில் யகர, ரகர, லகர ஈறுகள் – விகார ஈறுகள் – ழகர ஈறுகள் – ஆய்த ஈறுகள்.

**அலகு – 10 :குற்றியலுகரப் புணரியல்**

குற்றியலுகரத்தின் இயல்புகள் – பொதுப் புணர்ச்சிகள் – நெடில், உயிர், இடை, ஆய்தம், வன், மென், தொடர்ப் புணர்ச்சிகள் – குற்றுகரப் புணர்ச்சிகள் – குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சிகள்.

**<u>பாடநூல் :</u>**

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் (இளம்பூரணம்)

கழகப் பதிப்பு, சென்னை – 1996.

**பார்வை நூல்கள் :**


1. எழுத்திலக்கணக் கோட்பாடுகள் - சண்முகம் செ.வை.,அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,அண்ணாமலை நகர்.
2. தொல்காப்பிய எழுத்ததிகார உரை வளங்கள் - சிவலிங்கனார். ஆ.,உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு,சென்னை.


******

# தாள் : அற இலக்கியம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 412** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

தமிழில் அற இலக்கியங்களின் தனித்தன்மைகளைப் பயிற்றுவித்தல்.

**அலகு – 1 :**

அறம் – சொற்பொருள் – முப்பொருள் பாகுபாடு – நால்வகை உறுதிப்பொருள்கள்.

**அலகு – 2 :**

தொல்காப்பியத்தில் அறக் கூறுகள் – சங்க இலக்கியங்களில் அறக் குறிப்புகள் – காப்பியங்களில் அறம் - பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் அறம்

**அலகு – 3 :**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் – சொற்பொருள் விளக்கம் – பொது அறிமுகம் – நூல்கள் பற்றிய குறிப்புகள்

**அலகு – 4 :**

இம்மை, மறுமைக் கோட்பாடு – அறம் பற்றிய சிந்தனைகளும் மறுபிறப்புக் கோட்பாடும் – செல்வம் நிலையாமை பற்றிய கருத்துக்கள்.

**அலகு – 5 :**

காலந்தோறும் அறங்களின் வளர்ச்சி – மாற்றங்கள் – பண்பாட்டின் பிரதிபலிப்பு – இன்றைய சமுதாயத்தில் அறம் பெறும் பங்கு.

**அலகு – 6 :**

திருக்குறள் – அறன் வலியுறுத்தல் – அழுக்காறாமை – நிலையாமை – ஒப்புரவு அறிதல் – கல்லாமை முதலான அதிகாரங்கள்.

**அலகு – 7 :**

தெரிந்து தெளிதல் – இடுக்கண் அழியாமை – புல்லறிவாண்மை – நெஞ்சொடு கிளத்தல் – புலவி நுணுக்கம் முதலான அதிகாரங்கள்

**அலகு – 8 :**

நாலடியார் – கல்வி – நல் இனம் சேர்தல் – தாளாண்மை – நட்பு ஆராய்தல் – பழமொழி நானூறு – அறிவுடைமை – ஒழுக்கம் அதிகாரங்கள் மட்டும்.

**அலகு – 9 :**

நான்மணிக்கடிகை – ஏலாதி – திரிகடுகம் – முதல் ஐந்து பாடல்கள்.

**அலகு – 10 :**

பிற்கால நீதி இலக்கியங்கள் - உலகநீதி – மூதுரை – நன்னெறி – முதல் 10 பாடல்கள் மட்டும்.

**<u>பார்வை நூல்கள் :</u>**

1. ஆ.வேலுப்பிள்ளை - தமிழ் இலக்கியங்களில் காலமும் கருத்தும்

**********

# தாள் : பக்தி இலக்கியம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 413** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் ( 3 Credits)**

**நோக்கம் :**

தமிழ் இலக்கியத்தில் பக்தி இலக்கியத்தின் பின்னணிகளையும் தனித்தன்மைகளையும் எடுத்துரைத்தல்.

**அலகு – 1 :**

பக்தி என்னும் சொல்லின் பொருள் – பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பக்தி இலக்கியத்தின் கூறுகள்.

**அலகு – 2 :**

பக்தி இயக்கம் - பக்தி இயக்கத்தின் தோற்றம் – அதன் வரலாற்றுப் பின்னணி – சைவம், வைணவத்தின் எழுச்சி.

**அலகு – 3 :**

சமய வகைகள் - வைதிக சமயங்கள் – அறுவகைச் சமயங்கள் – அவைதிக சமயங்கள்

**அலகு – 4 :**

காணாபத்யம் – கௌமாரம் – சாக்தம் – சைனம் – பௌத்தம் – கிறித்துவம் – இசுலாம் – குறித்த அறிமுகச் செய்திகள்.

**அலகு – 5 :**

காரைக்காலம்மையார் – அற்புதத்திருவந்தாதி (1-25 பாடல்கள்) – திருமூலர் – மூன்றாம் தந்திரம் – முதல் 10 பாடல்கள் - திருஞானசம்பந்தர் – ஒன்றாம் திருமுறை – ‘பூவார் கொன்றை’ என்று தொடங்கும் 10 பாடல்கள்.

**அலகு – 6 :**

அப்பர் - ‘செத்தையேன்’ என்று தொடங்கும் 10 பாடல்கள் - சுந்தரர் – ஏழாம் திருமுறை - ‘பித்தா பிறைசூடி’ என்று தொடங்கும் முதல் 10 பாடல்கள் – மாணிக்கவாசகர் – ‘பிடித்த பத்து’.

**அலகு – 7 :**

ஆண்டாள் – நாச்சியார் திருமொழி – முதல் 10 பாடல்கள் – மதுரகவியாழ்வார் – கண்ணி நுண் சிறுதாம்பு.

**அலகு – 8 :**

திருமங்கையாழ்வார் – திருநெடுந்தாண்டகம் – குலசேகராழ்வார் – பெருமாள் திருமொழி – ‘திருவேங்கடகத்தில்’ என்று தொடங்கும் 677 பாடல் முதல் 687 முடிய.

**அலகு – 9 :**

தாயுமானவரின் மௌனகுரு வணக்கம் – அருணகிரிநாதரின் ‘முத்தைத்தரு’ என்று தொடங்கும் பாடல் –வள்ளலாரின் முதல் திருமுறையில் சிவநேச வெண்பா

**அலகு – 10 :**

இரட்சணிய மனோகரம் –பால்ய பிரார்த்தனை - முதல் 10 பாடல்கள் – மசுதான் சாகிபு – எக்காலக்கண்ணி.

**<u>பார்வை நூல்கள் :</u>**


1) தமிழர் சமய வரலாறு - ஆ.வேலுப்பிள்ளை
2) இந்திய தத்துவ ஞானம் – கி.இலட்சுமணன்
3) தமிழிலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் – மது. ச. விமலானந்தம்
4) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – டாக்டர் ஜெகத்ரட்சகன்
5) பன்னிரு திருமுறை – வர்த்தமானன் பதிப்பகம்
6) பன்னிரு திருமுறை வரலாறு – வெள்ளைவாரணனார்


******

# தாள் : நவீன இலக்கியம் - I

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 414** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம்**

நவீன இலக்கியத் தோற்றம், வளர்ச்சி, தனித்துவங்களை விளக்கி, சில படைப்புகளையும் படைப்பாளர்களையும் அறிமுகம் செய்தல்.

**அலகு – 1 :**

நவீன இலக்கியத் தோற்றப் பின்னணிகள் – பிறநாட்டார் வருகை – பாதிரிமார்களின் பணிகள் – அச்சுப்பொறி பயன்பாட்டுக்கு வருதல் – பத்திரிக்கைகள் உருவாதல்.

**அலகு – 2 :**

உரைநடை இலக்கியங்கள் அறிமுகமாதல் – மேலைநாட்டு இலக்கிய வகைகளான நாவல், சிறுகதை போன்றவை அறிமுகமாதல் – ஆங்கிலம் படித்தவர்கள் இலக்கிய முயற்சி மேற்கொள்ளல்.

**அலகு – 3 :**

நாவல் இலக்கியத் தோற்றம் – காப்பியத்திற்கும் நாவலுக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் – தொடக்ககால நாவல்கள் – வேதநாயகம்பிள்ளை, மாதவையா, ராஜமய்யரின் நாவல் முயற்சிகள்.

**அலகு – 4 :**

1950 முதல் 1930 வரையிலான காலகட்டம் – துப்பறியும் நாவல்கள் அதிகம் வெளிவருதல் – 1930 முதல் 1950 வரையிலான காலகட்டம் – தேசியப் பின்னணி கொண்ட நாவல்கள் – கல்கியின் நாவல் முயற்சிகள்.

**அலகு –5 :**

1950 முதல் 1980 வரையிலான காலகட்டம் – ஜெயகாந்தன், தி.ஜானகிராமன் போன்றோரின் நாவல்கள் – திராவிட, மார்க்சிய இயக்கப் பின்னணியில் வெளிப்பட்ட நாவல்கள் – கலை கலைக்காகவே என்று நோக்கில் வெளிப்பட்ட நாவல்கள் – அறிவியல் புனைவு கொண்ட நாவல்கள் – அண்மைக்கால நாவல் முயற்சிகள்.

**அலகு –6 :**

சிறுகதை இலக்கியத் தோற்றம் – பாரதி, மாதவையா, வ.வே.சு.போன்றோரின் முயற்சிகள் – மணிக்கொடி, சரஸ்வதி, தீபம், கணையாழி போன்ற சிற்றிதழ்கள் சிறுகதைகளை வளர்த்தமை.

**அலகு –7 :**

ஜெயகாந்தன் சிறுகதைகள் – பிரபஞ்சன் போன்றோரின் சிறுகதைகள் – கி.ராஜநாராயணன் சிறுகதைகள் – 1980கள் வரை சிறுகதை வளர்ச்சி – அண்மைக்கால சிறுகதைகள்.

**அலகு –8 :**

புதுக்கவிதை தோற்றம் – வசனகவிதை முயற்சி – ந.பிச்சமூர்த்தியின் கவிதைகள் – 'எழுத்து' பத்திரிக்கையின் பங்களிப்பு – 1960களில் புதுக்கவிதை முயற்சிகள்.

**அலகு –9 :**

சிறுபத்திரிக்கைகளும் புதுக்கவிதை முயற்சிகளும் – நடை, கசடதபற, முதல் 1980 வரையிலான காலகட்டங்களில் புதுக்கவிதை வளர்ச்சி – வானம்பாடிக் கவிதை முயற்சி – ஹைக்கூவின் தோற்றம், வளர்ச்சி.

**அலகு –10 :**

நவீன நாடகங்களின் தோற்றம் – மரபு நாடகங்களுக்கும் நவீன நாடகங்களுக்குமுள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் – நவீன நாடக அமைப்புகள் உருவாதல் – ஞாநி, கோமல் சுவாமிநாதன், ந.முத்துசாமி போன்றோரின் நாடக முயற்சிகள் – நிகழ்கலை குறித்த புரிதல்கள் – வெளி ரெங்கராஜனின் முயற்சிகள்.

**<u>பாட நூல்கள் :</u>**


1) மாதவையா, பத்மாவதி சரித்திரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1994.
2) புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் சிறுதைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3) பாரதியின் வசன கவிதை.
4) பசுவய்யா, நடுநிசி நாய்கள், க்ரியா, சென்னை, 1975.
5) தமிழன்பன், இரவுப் பாடகன், பூம்புகார் பிரசுரம், சென்னை, 2003.

6) பிரபஞ்சன், முட்டை (நாடகம்), அகரம், கும்பகோணம், 1997 (இரண்டாம் பதிப்பு).

**பார்வை நூல்கள் :**


1. பெ.கோ.சுந்தர்ராஜன், சிவபாத சுந்தரம், தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், சென்னை கிறத்துவ இலக்கியச் சங்கம், 1997.
2. பெ.கோ.சுந்தர்ராஜன், சிவபாத சுந்தரம், தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், க்ரியா, சென்னை, 1989.
3. ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், தற்காலத் தமிழ் இலக்கியம், மக்கள் வெளியீடு, சென்னை, 1985.
4. ம.மதியழகன், நவீன இலக்கியச் சிந்தனைகள், ப்ரித் வெளியீட்டகம், புதுவை, 1992.
5. இராஜ மார்த்தாண்டன், புதுக்கவிதை வரலாறு, யுனைடெட் ரைட்டர்ஸ், சென்னை, 2003.
6. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அன்னம் (பி) லிட், சிவகங்கை, 1992 (மூன்றாம் பதிப்பு).
7. சு.அரங்கராசு, தமிழ்ப் புதுக்கவிதை – ஒரு திறனாய்வு, மூன்றம் உலகப் பதிப்பகம், சென்னை, 1991.
8. முனைவர் மு.இராமசாமி (பதிப்பு), இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
9. தமிழில் நவீன நாடகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,1996.
10. மு.இராமசாமி, தமிழ் நாடகம் நேற்று, இன்று, நாளை.
11. நெல்லை சு.முத்து, தமிழில் ஹைக்கூ, அன்னம் (பி) லிட், சிவகங்கை, 1994.


*****

# தாள் : சமூகவியலும் இலக்கியமும்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 415** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

இலக்கியங்கள் அந்தந்தக் காலத்தின் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதால், இலக்கியத்தினூடாகச் சமூக வரலாற்றினை மாணவர்களுக்குத் தெரிவித்தல்.

**அலகு –1 :**

சமூகவியல் – சமுதாயத் தோற்றம் – உருவாக்கம் – சொற்பொருள் விளக்கம் – சமூக வாழ்வு – சமூகவியல் சிந்தனைகள் – சமூகம் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் – சமூக அமைப்புகள் – சமூக நிறுவனங்கள்.

**அலகு –2 :**

இலக்கியமும் சமுதாயவியலும் – இலக்கியமும் சமூகத் தொடர்பும் – இலக்கியம் சமூகத்தின் மூலதனம் – இலக்கியத்தில் சமுதாயச் சித்திரிப்பு – இலக்கியத்தின் பண்புகள்.

**அலகு –3 :**

குடும்பம் - தோற்றம் – பொருள் விளக்கம் – வகை – கூட்டுக் குடும்பம் – தனிக் குடும்பம் – குடும்பமும் சமுதாயமும் – இலக்கியங்களில் குடும்பச் சிந்தனைகள் – சமூகத்தில் ஆண் மற்றும் பெண்ணின் நிலை.

**அலகு –4 :**

திருமணம் – வகை – காரண முறை – பலதார மணம் – குடும்பத்தை உருவாக்கும் காரணி – இலக்கியங்களில் திருமணச் செய்திகள்.

**அலகு –5 :**

சமயம் – சொற்பொருள் விளக்கம் – சமயமும் சமுதாயமும் – சமயப் பாகுபாடுகள் – சமய உணர்வு – சமயச் சிந்தனைகள் – உயிர்ப் பலியிடுதல் – கொல்லாமை – ஊன் உண்ணாமை – பத்தினி வழிபாடு – சைவ சமய நெறிகள் – இலக்கியங்களில் சமயச் செய்திகள்.

**அலகு –6 :**

சாதி – சொற்பொருள் விளக்கம் – சாதி பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் – பல்வேறு வகை – தீண்டாமை கொடுமை – இலக்கியங்களில் சமுதாயச் சிந்தனைகள்.

**அலகு –7 :**

கல்வி – சொற்பொருள் விளக்கம் – கல்வியின் சிறப்பு – பொருளாதார அடிப்படையில் கல்வி – கல்வியின் பயன் – இலக்கியங்களில் கல்வி நிலைகள்.

**அலகு –8 :**

அரசியல் – அரசியல் சொற்பொருள் விளக்கம் – அரசியல் நிலைகள் – அரசியலும் சமுதாயமும் – மக்கள் பாதுகாப்பு - அறிஞர்களின் கருத்துக்கள் – இலக்கியங்களில் அரசியல் நிலைகள்.

**பார்வை நூல்கள் :**


1. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் – கே.கே.பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. செம்மொழி இலக்கியமும் சமூகவியல் கோட்பாடும் - அறிஞர் எல்.கே.அக்னி புத்திரன்.
3. சமூகவியலும் இலக்கியமும் – சி.மறைமலை
4. பண்பாட்டுச் சமுதாயம் – அ.பாஸ்கர்
5. தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் – தாயம்மாள் அறவாணன்
6. பண்பாட்டு மானிடவியல் – பக்தவச்சல பாரதி
7. தமிழர் திருமணம் – வி.சி.சசிவல்லி
8. கல்விச் சிந்தனைகள் - அ.அண்ணாமலை
9. சமூகவியல் – சி.என்.நடராஜன்
10. காலம்தோறும் திருமணம் – வெ.மன்னார்
11. அன்றும் இன்றும் – ஆ.சிலுவைமுத்து
12. சமுதாயத் தத்துவம் – க.பாஸ்கரன்


******

# தாள் : தமிழில்  பெண் இலக்கியங்கள்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 416** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

பெண் இலக்கியக் கொள்கைகளைப் பெண் படைப்பாளர்களின் இலக்கியங்கள் கொண்டு விளக்குதல்.

**அலகு –1 :**

பெண் இலக்கிய வரலாறு – பெண் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விளக்கங்கள்.

**அலகு –2 :**

பெண் இலக்கியப் பகுப்பு – பெண்மை இலக்கியம் – பெண்ணிய இலக்கியம் – பெண்நிலை இலக்கியம் என்ற படிநிலைகள்.

**அலகு –3 :பெண்பாற் புலவர்கள்**

ஔவையார் – வெள்ளி வீதியார் – பொன்முடியார் - காரைக்காலம்மையார் – ஆண்டாள் ஆகியோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்.

**அலகு –4 : பெண் நாவலாசிரியர்கள்**

கரிப்பு மணிகள் – இராஜம்கிருஷ்ணன், கருக்கு - பாமா, யாரும் யாருடனும் இல்லை – உமா மகேஸ்வரி.

**அலகு – 5 : பெண் படைப்பாளர்களின் சிறுகதைகள்**

வீட்டின் மூலையில் ஒரு சமையலறை – அம்பை, வலி – அனுராதா, பொன்னுத்தாயி – பாமா, அறிவு ஜீவிகள் காதலிக்கிறார்கள் – உஷா சுப்பிரமணியன், இந்தியா கேட் – காவேரி, வதம் – திலகவதி.

**அலகு – 6 : பெண் கவிஞர்களின் படைப்புகள்**

இரா.மீனாட்சி - சுகந்தி சுப்பிரமணியன் – ப.கல்பனா – கனிமொழி – சுகிர்தராணி – மாலதி மைத்ரி – பாலபாரதி – சல்மா – குட்டி ரேவதி – இளம்பிறை - அ.வெண்ணிலா – அழகு நிலா – சக்தி ஜோதி – தமிழச்சி தங்கபாண்டியன் – ஆண்டாள் பிரியதர்ஷினி – லீனா மணிமேகலை – மனுஷி முதலியோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்

**அலகு – 7 :பெண் எழுத்தாளர்களின் நாடகங்கள்**

முடிவில்லா உரையாடல் – அம்பை, முதல் பூ – ஆர்.சூடாமணி, கண்ணகி – கிருத்திகா, வெளிச்சத்துக்கு வாங்க – காந்திமேரி, பனித்தீ – அ.மங்கை.

**அலகு –8 : பெண்ணியத் திறனாய்வாளர்கள்**

எலைன் ஷோ வால்டர், ஹெலன் சீக்சூ, ஜூலியா கிறிஸ்தவா, சிமோன் தோ பவார் – போன்ற மேலைநாட்டுப் பெண்ணியத் திறனாய்வாளர்கள்.

**<u>பார்வை நூல்கள் :</u>**


1. பெண் மையச் சிறுகதைகள் – இரா.பிரேமா, சாகித்திய அகாதமி வெளியீடு, இரண்டாம் பதிப்பு – 2019.
2. முடிவில்லாத உரையாடல் – நந்தமிழ் நங்கை (தொகுப்பு), மாற்று வெளியீட்டகம், முதல் பதிப்பு – 2009.
3. பெண்ணியச் சிறுகதைகள் – இரா.பிரேமா, காவ்யா வெளியீடு, சென்னை.
4. Showalter, Elaine (1977), The Literature of their own, British Women Novelists from Bronte to Lessing, Princeton, N.J.Princeton University Press.
5. Moi Toril, Sexual / Textual Politics: Feminist Literary Theory, Routledge, London, (1991 - Reprinted).


******

# தாள் : மொழித்திறன்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 417** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

தமிழ்மொழி இலக்கணத்தை எளிமையாகக் கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் மொழித்திறனை வளர்த்தல்.

**அலகு – 1 :**

அறிமுகம் : தமிழின் தனித்தன்மை – தொன்மை – செவ்வியல் தன்மை – தனிநிலை – ஒட்டுநிலைப் பண்பு – திராவிட மொழிக்குடும்பம் – இலக்கண அறிவின் இன்றியமையாமை.

**அலகு – 2 :**

எழுத்தியல் : எழுத்தும் அதன் வகைகளும் – முதல் எழுத்து, சார்பெழுத்து – முதனிலை, இறுதிநிலை, இடைநிலை எழுத்துக்கள் – மெய் மயக்கம் – சுட்டு, வினா எழுத்துக்கள் – எழுத்துப்போலி.

**அலகு – 3 :**

சொல்லியல் : சொல்லின் அமைப்பு – பகுபதம், பகாபதம் – பகுபத உறுப்பிலக்கணம் – சொல் வகைகள் – இலக்கண வகை – இலக்கிய வகை – பெயர், வினை, இடை, உரிச் சொற்கள – இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் – தற்சமம், தற்பவம் – திணை, பால், எண், இடப் பகுப்புமுறை.

**அலகு –4 :**

பெயரியல் : பெயர்ச்சொல் பற்றிய விளக்கம் – பெயர்ச்சொல்லின் தன்மைகள் – வகைகள் – இலக்கண வகை – மொழியியல் அடிப்படையிலான வகைப்பாடு – மாற்றுப்பெயர், ஆக்கப்பெயர், கூட்டுப்பெயர், வினையாலணையும் பெயர் – ஆகுபெயரும் அதன் வகைகளும் – எண்வகை வேற்றுமைகள்.

**அலகு – 5 :**

வினையியல் : வினைச்சொல் பற்றிய விளக்கம் – வினைச்சொல்லின் அமைப்பு – வினைச்சொல் வகைகள் – முற்று வினை, எச்சவினை – செய்வினை, செயப்பாட்டுவினை – செயப்படுபொருள் குன்றிய வினை,

குன்றாவினை – தன்வினை, பிற வினை, காரண வினை – முதல் வினை, துணை வினை, தனிவினை, கூட்டுவினை.

**அலகு – 6 :**

இடை மற்றும் உரியியல் : இடைச்சொல் வகைகள் – உம், ஏகார, ஓகார முதலிய இடைச்சொற்கள் – உரிச்சொல் வகைகள் – ஒரு குணம் தழுவிய உரிச்சொல் – பல குணம் தழுவிய உரிச்சொல் – பெயரடை, வினையடை.

**அலகு – 7 :**

தொடரியல் : தனி வாக்கியம் – கூட்டு வாக்கியம் – கலவை வாக்கியம் – பெயர்ப் பயனிலை – வினைப் பயனிலை – எதிர்மறை, வினா வாக்கியங்கள்.

**அலகு – 8 :**

பிழைகளும் திருத்தங்களும் – சந்திப் பிழையை நீக்குதல் – வலிமிகும், மிகா விதிகள் – இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி – ரகர, றகர வேறுபாடுகள் – லகர, ளகர, ழகர வேறுபாடுகள் – ணகர, னகர, நகர வேறுபாடுகள்.

**பார்வை நூல்கள் :**


1. எம்.ஏ.நுஃமான், அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், புத்தாநத்தம்.
2. அ.கி.பரந்தாமனார், நல்ல தமிழ் எழுத வேண்டுமா?, அல்லி நிலையம், சென்னை.
3. சொ.பரமசிவம், நற்றமிழ் இலக்கணம், பட்டுப் பதிப்பகம், சென்னை.
4. செ.வை.சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. செ.வை.சண்முகம், சொல்லிலக்கணக் கோட்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. அ.சண்முகதாஸ், தமிழ்மொழி இலக்கண இயல்புகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.
7. கு.பரமசிவம், இக்காலத் தமிழ் மரபு, கழக வெளியீடு, சென்னை.


******

# தாள் : நாட்டுப்புற விளையாட்டுகள்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 418** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

நாட்டுப்புற விளையாட்டுகளின் சிறப்புகளைக் கூறி, அதன் தனித்தன்மைகளை வெளிப்படுத்தல்.

**அலகு -1 : அறிமுகம்**

விளையாட்டுகளின் விளக்கங்களும் வரையறைகளும் – விளையாட்டுகளின் தோற்றம் – தமிழர் விளையாட்டுக் கொள்கை.

**அலகு - 2 : வகைப்பாடுகள்**

அக விளையாட்டுகள் – புற விளையாட்டுகள் – தனிநபர் விளையாட்டு – இருவர் கலந்து கொள்ளும் விளையாட்டு – குழு விளையாட்டு – ஆடவர் – மகளிர் – சிறார் - சிறுவர் – சிறுமியர் – குழந்தைகள் விளையாட்டு.

**அலகு - 3 : விளையாட்டுகளும் பருவங்களும்**

குழந்தைப் பருவம் – முதிர்ந்த குழந்தைப் பருவம் – சிறார் பருவம் – முதிர்ந்த சிறார் பருவம் – இளமைப் பருவம் – முதுமைப் பருவம்.

**அலகு– 4 : பின்புலச் சூழல்**

ஆடுகளங்கள் – ஆடுகளங்கள் அழியும் தன்மை – காலமும் பொழுதும் – கோடைக்காலம் – மழைக்காலம் – குளிர் காலம் – காலைப்பொழுது – நண்பகல் – மாலை / முன்னிரவு – தேர்த்திருவிழா – திருநாள் – சூழல் மாறுதலும் விளையாட்டுகள் மறைதலும்.

**அலகு– 5 : விளையாட்டுச் சூழலும் முறைகளும்**

விளையாட்டைத் தெரிவு செய்தல் – அணி பிரித்தல் – அணியின் தலைவரைத் தெரிவு செய்தல் – முதலில் விளையாடும் அணி முடிவு செய்தல் – தொடுபவரைத் தெரிவு செய்தல் – இடைநிறுத்தம் – சண்டைகள் – சச்சரவுகள் – விளையாட்டின் முடிவு.

**அலகு– 6 : விளையாட்டுகளும் பாடல்களும்**

விளையாட்டில் பாடல்கள் இடம்பெறும் முறை – கேலி – வினாவிடை – எண்கள் – நாப்பிறழ்வு – கற்பிதங்கள் – பிற பாடல்கள் – வடிவமும்

அமைப்பு முறையும் – சொற்கட்டு – ஒலிப்பு முறையும் ஓசை அமைப்பும் – கட்டுதல் / பரவுதல் – அழிதலும் காத்தலும்.

**அலகு– 7 : திரிபு வடிவங்கள்**

நாட்டுப்புறவியலிலும் திரிபு வடிங்களும் – விளையாட்டுப் பெயர்களில் – விளையாட்டு முறைகளில் – விளையாட்டுப் பாடல்களில் – ஏற்படும் திரிபு வடிவங்கள் – திரிபு வடிவங்களுக்கான காரணங்கள் – நவீன விளையாட்டுக்களில் நாட்டுப்புற விளையாட்டுகளின் தாக்கம்.

**அலகு– 8 : விளையாட்டுகளின் விளைவுகள்**

செயல் முறைக் கல்வியைப் பயிற்றுவித்தல் – உடற்பயிற்சியும் உடல் வளர்ச்சியும் ஏற்படுதல் – புலப்பயிற்சி ஏற்படுதல் – கைவினைத் திறன் வெளிப்படுதல் – நல்லுணர்வுகளை வளர்த்தல் – நடிப்புத் திறனை வெளிப்படுத்தல் – கல்வி பாதித்தல் – சூதாட்ட மனப்பான்மை உருவாகுதல் – உடலுக்கு ஊறு ஏற்படுதல்.

**<u>பார்வை நூல்கள்</u>**


**1)** ஞா.தேவநேயன், ‘தமிழ் நாட்டு விளையாட்டுகள்’, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**2)** இராம.பாலசுப்பிரமணியன், ‘தமிழர் நாட்டு விளையாட்டுகள்’, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

**3)** அ.பிச்சை, ‘தமிழர் பண்பாட்டில் விளையாட்டுகள்’, கபிலன் பதிப்பகம், சென்னை.

**4)** தி.நடராசன், ‘நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள்’, சரவணா புக்ஸ், சென்னை.


******

# தாள் : பாரதியார்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 419** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

பாரதியார் தம் வரலாற்றையும் படைப்புகளையும் அறிமுகம் செய்தல்.

**அலகு – 1 : வாழ்க்கை வரலாறு**

இளமைப் பருவம் – கவியரசர் பட்டம் – காசிக்குப் புறப்பாடு – அரசியல் பிரவேசம் - நிவேதிதா தரிசனம் – புதுச்சேரி வாழ்க்கை – அமரத்துவம்.

**அலகு – 2 : பாரதியாரின் கவிதைகள்**

பாரதியாரின் கவித்திறன் – தேசியம் – பெண்ணுரிமை – இயற்கை தரிசனம் – பாரதியின் அறிவியல் பார்வை – நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கம்.

**அலகு – 3 : கண்ணன் பாட்டு**

தோழன் – சீடன் – சேவகன் – காதலன் – காதலி – குழந்தை.

**அலகு –4 : குயில் பாட்டு**

தன்னுணர்ச்சிப் பாட்டு – குயிலிக் காதல் – குரங்குக் காதல் – மாட்டுக் காதல் – மானுடக் காதல் – குயில்பாட்டும் வேதாந்தக் கருத்துக்களும்.

**அலகு –5 : பாஞ்சாலி சபதம்**

காப்பியக் கூறுகள் – பாஞ்சாலி சபதமும் அரசியலும் – பெண் விடுதலை – சமூக வரலாற்றுப் பின்னணி – காப்பியத் தலைமை மாந்தர்கள் – இலக்கிய நயம்.

**அலகு –6 : பாரதியின் வசன கவிதை**

இன்பம் – ஞாயிறு – சக்தி – கடல் – காற்று – வெண்ணிலா

**அலகு –7 : பாரதியின் உரைநடை**

பாரதியின் உரைநடை – கல்விக் கோட்பாடுகள் – பாரதியின் உரைநடையில் அறிவியல் தமிழ் – பாரதியின் உரைநடையில் தமிழினம் – பாரதியின் ஞானரதம் – சிறுகதைகள்.

**அலகு –8 : பாரதியும் பத்திரிக்கைகளும்**

சுதேசமித்திரன் – இந்தியா – சக்கரவர்த்தினி – விஜயா – பிற பத்திரிக்கைகள்.

**பார்வை நூல்கள் :**


1) எஸ்.விஜயபாரதி, 'மகாகவி பாரதி – ஒரு திறனாய்வு', வானதி பதிப்பகம், சென்னை, 1978.
2) தொ.மு.சி.ரகுநாதன், 'பாரதி காலமும் கருத்தும்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1982.
3) சிற்பி (தொகுப்பு), 'மகாகவி பாரதி மதிப்பீடுகள்', கோலம் வெளியீடு, பொள்ளாச்சி, 1981.
4) நா.செயராமன், கருணாகரன் (பதிப்.), 'பாரதி உரைநடை ஆய்வு', பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
5) 'பாரதியார் கவிதைகள்', மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.
6) T.H.ஐசக், 'பாரதியார் கவிதை நூல்கள் குறித்த ஆய்வுகள் – ஒரு மதிப்பீடு', சாமுவேல் நாயகம், கிறிஸ்டல் அச்சகம், மார்த்தாண்டம், 1992.


******

# SEMESTER – II

## Hard Core Courses (அடிப்படைப் பாடங்கள்)

| | | |
|---|---|---|
| TAML – 421 | - | தொல்காப்பியம் – சொல் (THOLKAAPIAM – SOL) |
| TAML – 422 | - | ஒப்பிலக்கியம் (COMPARATIVE LITERATURE) |
| TAML – 423 | - | பிரபந்தம் (PRABANTHAM) |
| TAML – 424 | - | காப்பியம் (EPICS) |

## Soft Core Courses (அருந்துணைப் பாடங்கள்)

| | | |
|---|---|---|
| TAML – 425 | - | மார்க்சியமும் இலக்கியமும் (MARXISM AND LITERATURE) |
| TAML – 426 | - | மானிடவியலும் இலக்கியமும் (ANTHROPOLOGY AND LITERATURE) |
| TAML – 427 | - | செம்மொழித் தமிழ் (CLASSICAL TAMIL) |
| TAML – 428 | - | இலக்கியத்தில் தொன்மம் (MYTH IN LITERATURE) |
| TAML – 429 | - | பாரதிதாசன் (BHARATHIDASAN) |

# தாள் : தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 421** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :** தொல்காப்பியரின் சொல்லிலக்கணக் கோட்பாடுகளைப் பயிற்றுவித்தல்.

**அலகு – 1 :**

தமிழில் தோன்றி வளர்ந்துள்ள சொல்லிலக்கண நூல்களைப் பொது அறிமுகம் செய்தல் – சொல் என்பதை விளக்குதல் – சொல் பகுப்பு முறைகளை விளக்குதல் – இயல் அமைப்பு முறையை விளக்குதல்.

**அலகு – 2 :**

கிளவியாக்கம் -பெயர்க்காரணம் – இருதிணை ஐம்பாற் சொற்கள் – வழுவும் வழுவமைதியும் – திணை வழுவமைதி – பால் வழுவமைதி – இட வழுவமைதி – செப்பு வழுவமைதி – வினா வழுவமைதி – மரபு வழுவமைதி.

**அலகு – 3 :**

வேற்றுமையியல் - வேற்றுமையின் வகையும், பெயரும் – முதல் வேற்றுமை முதல் ஏழு வேற்றுமைகள் வரை – உருபுகள், பொருள்கள்.

**அலகு – 4 :**

வேற்றுமை மயங்கியல் - பொருள் மயக்கம் – உருபு மயக்கம் – ஒரு பொருளில் ஈருருபு மயங்குதல் – ஆகுபெயர் – விளமரபு விளியேற்கும் பெயர்கள் – உயர்திணைப் பெயர் விளியேற்றல் – விளியேலாப் பெயர்கள் - விரவுப் பெயர்கள் விளியேற்றல் – இன்ன பிற.

**அலகு – 5 :**

பெயரியல் -பெயரின் தன்மைகள் – நால்வகைச் சொற்களுக்கும் பொதுநிலை – உயர்திணைப் பெயர்கள் – அஃறிணைப் பெயர்கள் – விரவுப் பெயர்கள்.

**அலகு – 6 :**

வினையியல் - வினைச்சொல்லின் பொது இலக்கிணம் – உயர்திணைக்குரிய தெரிநிலை வினை – தன்மையொருமை வினைமுற்று – தன்மைப்பன்மை வினைமுற்று – படர்க்கை ஒருமைக்குரியன – படர்க்கைப் பன்மைக்குரியன – உயர்திணைக்குரியன.

**அலகு –7 :**

அஃறிணைத் தெரிநிலை – படர்க்கை ஒருமை வினைமுற்று – படர்க்கைப் பன்மை வினைமுற்று – அஃறிணைக் குறிப்பு வினை – விரவு வினை – முன்னிலை வினைமுற்று – வியங்கோள் வினைமுற்று – வினையெச்சம் – பெயரெச்சம் – கால வழுவமைதி.

**அலகு – 8 :**

இடையியல் – இடைச்சொல்லின் இலக்கணம் – வகைகள் – தத்தம் குறிப்பில் பொருள் செய்குவன – அசைநிலைகள் – இசை நிறைவாய் வருவன – எண்ணிடைச் சொற்கள் – உரியியல் – சொற்கள் – குறிப்புப் பற்றி வருவன – ஒரு சொல் ஒரு பொருட்குரியது – ஒரு சொல் பல பொருட்குரியது – பல சொல் ஒரு பொருளுக்குரியன – பண்பு பற்றி வருவன – இசை பற்றி வருவன – உரிச்சொல் – பொருள் உணரும் நிலை.

**அலகு – 9 :**

எச்சவியல் – பெயர்க்காரணம் – செய்யுள் ஒழிபு – நால்வகைச் சொற்கள் – செய்யுள் விகாரம் – மொழி புணரியல்பு – வழக்கிலக்கணத்து ஒழிபு – தொகைச் சொற்கள் – வேற்றுமைத் தொகை – உவமைத் தொகை – வினைத் தொகை – பண்புத் தொகை – உம்மைத் தொகை – அன்மொழித் தொகை.

**அலகு – 10 :**

அடுக்கு – ஒரு சொல் அடுக்கு – இசை நிறை – அசை நிலை – பொருளொடு புணர்தல் – அசைநிலை அடுக்கு – வினைமுற்று எச்சங்கள் - பிரிநிலை எச்சம் – வினையெச்சம் – பெயரெச்சம் – ஒழியிசை எச்சம் - எதிர் மறையெச்சம் – உம்மை எச்சம் – எனவென் எச்சம் – குறிப்பெச்சம் – இசையெச்சம் – சொல்லெச்சம் – மரபு ஒழிபு – அவையல் கிளவி – இரத்தல் கிளவி – வழக்கு நெறியால் வருவன – குறிப்பு மொழி – முன்னிலைச் சொல் – ஒரு பொருள் இரு சொல் – ஒருமை, முன்னிலை சுட்டிய பெயர்கள்.

**பாட நூல் :**

தொல்காப்பியம் – சொல்லதிகாரம் (சேனாவரையர் உரை)

**பார்வை நூல்கள் :**

ஆ.சிவலிங்கனார் உரை வளமும், இ.சுந்தரமூர்த்தியின் சொல்லதிகாரச் சேனாவரையமும்.

**********

# தாள் : ஒப்பிலக்கியம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 422** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

தமிழில் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளைப் பயிற்றுவித்தல்.

**அலகு – 1 :**

ஒப்பிலக்கியம் – வரையறை – சிக்கல்கள் – எல்லை – ஒப்பிலக்கியம் பற்றிய பிரெஞ்சு மற்றும் அமெரிக்க வரையறைகள் – உலக இலக்கியம் – பொது இலக்கியம் - தேசிய இலக்கியம் – இன்ன பிற.

**அலகு –2 :**

தாக்கக் கோட்பாடு – போலச் செய்தல் – தாக்கத்துக்கும் போலச் செய்தலுக்கும் உள்ள வேறுபாடு – தாக்க ஆய்வின் நெறிமுறைகள் – தாக்க ஆய்வின் நோக்கம் – தமிழில் இக்கோட்பாட்டை ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் பொருத்திக்காட்டல் – இணைவரைக் கோட்பாடு.

**அலகு –3 :**

வரவேற்புக் கோட்பாடும் நிலைப்பேறாக்கமும் – தாக்கத்திற்கும் வரவேற்பிற்கும் உள்ள வேறுபாடு – இலக்கிய வரவேற்பு – இலக்கிய உளவியல் – இலக்கியச் சமூகவியல் – தரமான படைப்பாளிகளையும், படைப்புகளையும் மீட்டெடுத்தல் – தமிழில் இக்கோட்பாட்டை ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் பொருத்திக் காட்டுதல்.

**அலகு –4 :**

இலக்கிய வகைமைக் கோட்பாடு – இலக்கிய வகைமைகளின் உருவாக்கம் – வகைப்படுத்தலில் உள்ள சிக்கல்கள் – ஒப்பிலக்கியத்தில் வகைமை ஆய்வு – வகைமை வரலாறு – வகைமைகள் நாடு விட்டு நாடு பரவுதல் – பிரெஞ்சு ஒப்பிலக்கியவாதிகளின் கூர்தலறக் கோட்பாடு – தமிழில் இலக்கிய வகைமை.

**அலகு – 5 :**

அடிக்கருத்தியல் கோட்பாடு – அடிக்கருத்து – சொற்பொருள் விளக்கம் – அடிக்கருத்து உருவாக்கம் – வெளிநாட்டாரின் அடிக்கருத்து - தமிழில் அடிக்கருத்து – அகலிகை அடிக்கருத்து – நந்தன் அடிக்கருத்து – மதுரை

வீரன் அடிக்கருத்து – அடிக்கருத்தை எடுத்துக்காட்டுகளுடன் பொருத்திப்பார்த்தல் – அடிக்கருத்தை ஒப்பிட்டு ஆயும் முறை – அடிக்கருத்துக்கும் துணைக்கருத்துக்கும் உள்ள உறவு – இன்ன பிற.

**அலகு – 6 :**

இலக்கியத்திற்கும் கலைகட்கும் இடையே உள்ள உறவு – கலைகளுக்கிடையேயான கொள்வினை, கொடுப்பினை – கலைகள் – ஒன்றையொன்று வளர்த்துக்கொள்ளல் – கலை, இலக்கியத்திற்கிடையேயான ஒப்புமை வரலாறு – மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை – மொழிபெயர்ப்பின் வகைகள் – ஒப்பிலக்கிய வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் தேவை

**அலகு – 7 :**

இயக்கங்களும் இலக்கியங்களும்–இயக்கங்களும் படைப்பாளர்களும் – இயக்கங்களுக்குக் கட்டுப்படாத படைப்பு – ஒரே படைப்பாளன் பல இயக்கப்போக்குகள்.

**அலகு – 8 :**

மேலைநாட்டார் ஆய்வுகள் – ஜி.யு.போப் –கமில் சுவலபில் – ஜான் மார் – ஜார்ஜ் எல்.ஹார்ட் – லூபா – விதாலி ஃபூர்ணிகா – குரோ போன்றோர் - இந்திய ஆய்வுகள் – ஏ.கே.ராமானுஜன் (Poems of Love and war), என்.கே.சித்தாந்தா (Heroic Age of India).

**அலகு – 9 :**

தமிழ் கிரேக்க வீரநிலைக் காலப் பாடல்கள் – திருக்குறளும் பிறமொழி அற இலக்கியங்களும் – கம்பனும் வால்மீகியும் – கம்பனும் மில்டனும் – பாரதியும் விட்மனும் – இளங்கோவும் சேக்ஸ்பியரும் – பாரதியும் ஷெல்லியும் – பாரதிதாசனும் வில்லியம் வேர்ட்ஸ்வெர்த்தும்.

**அலகு – 10 :**

தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் – வ.வே.சு. ஐயர் – வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், தனிநாயக அடிகள் – தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் - வையாபுரிப்பிள்ளை - க.கைலாசபதி – கா.சிவத்தம்பி – வை.சச்சிதானந்தம் – கா.செல்லப்பன் – ப.மருதநாயகம் – தமிழண்ணல் – கதிர் மகாதேவன் – அ.பிச்சை - ம.திருமலை - எஸ்.ராமகிருஷ்ணன் – ஜான்சாமுவேல் - சிதம்பர ரகுநாதன் - க.பஞ்சாங்கம் – போன்றோர்.

**பார்வை நூல்கள் :**


1. சச்சிதானந்தம்.வை., ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்.
2. தமிழண்ணல், ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1973.
3. கைலாசபதி க., ஒப்பியல் இலக்கியம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1978.
4. கி.இராசா, ஒப்பிலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2018.
5. Weisstien Ulrich, Comparative Literature and Literary Theory, Survey & Introduction, Indiana Univrersity, Bloomigton, 1973.


******

# தாள் : பிரபந்தம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 423** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

தமிழில் உள்ள சிற்றிலக்கிய வகைகளின் தோற்றம், பின்னணி, வளர்ச்சிகளை அறிமுகம் செய்து வைத்தல்.

**அலகு – 1 : சிற்றிலக்கிய அறிமுகம்**

தமிழ் இலக்கிய வகைமைகளில் சிற்றிலக்கிய வகை – சிற்றிலக்கியத்திற்கான பொது இலக்கண வரையறை – சிற்றிலக்கியங்களின் காலம் – பழந்தமிழ் இலக்கியங்களில் சிற்றிலக்கியக் கூறுகள் – சிற்றிலக்கியச் சிறப்புகளும் தனித்தன்மைகளும்.

**அலகு –2 : பிள்ளைத்தமிழ்**

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் – தனி இலக்கியமாக உருப்பெறுதல் – பிள்ளைத் தமிழ் இலக்கணமும் அதில் காணும் நெகிழ்வுகளும் – ஆண்பாற் பருவங்கள், பெண்பாற் பருவங்கள்- சேக்கிழார் பிள்ளைத்தமிழ் – சிற்றில், சிறுபறை (18 பாடல்கள்)

**அலகு –3 : பரணி**

பரணி – பெயர்க்காரணம் – பண்டைய இலக்கியங்களில் காணும் பரணி இலக்கிய உறுப்புகள் – பெயர் பெறும் முறை – கலிங்கத்துப்பரணி – களம் பாடியது (473-503 வரையிலான பாடல்கள்)

**அலகு –4 : அந்தாதி**

அந்தாதியின் தோற்றம் – சங்க இலக்கியங்களில் அந்தாதிக் கூறுகள் – அந்தாதியின் இலக்கணம் – அந்தாதி வகைகள் - அந்தாதி (1-25 பாடல்கள்)

**அலகு –5 : தூது**

தூது இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் – புறத்திணை – அகத்திணை தூது – தூதுக்குரிய பொருட்கள் – தூது இலக்கணம் – பெயர் பெறும் முறை – தமிழ்விடு தூது – (115-152 கண்ணிகள்)

‘ஓர் வாழ்க்கை வேண்டிய யுயர்கிழிகொள் வாள்கொங்கு’ .... ....
‘விருந் தமிழ்த மென்றாலும் வேண்டேன்’

**அலகு – 6 : உலா**

உலாவின் தோற்றம் – உலா இலக்கணம் – தசாங்கம் கூறல் – மகளிர் விளையாட்டு – உலாவில் காணும் பொதுச் செய்திகள் -குலோத்துங்க சோழன் உலா – (122 - 200 பாடல்கள்)

**அலகு – 7 : கலம்பகம்**

பெயர்க்காரணம் – கலம்பகத்திற்கான இலக்கணம் – கலம்பக உறுப்புகள் – முதல் கலம்பகம் – மதுரைக் கலம்பகம் (25 - 42 பாடல்கள் வரை)

**அலகு – 8 : சதகம்**

தோற்றமும் வளர்ச்சியும் – பெயர்க்காரணம் – சதக இலக்கணம் - குமரேச சதகம் (13 – 22 பாடல்கள் வரை)

**அலகு – 9 : குறவஞ்சி**

பண்டைய இலக்கியத்தில் குறவஞ்சி இலக்கியக் கூறுகள் – குறத்திப்பாட்டு – குறவஞ்சியில் நாடகக் கூறுகள் -குற்றாலக்குறவஞ்சி – குறத்தி வருதல் – குறத்தி கிளைச் சிறப்புக் கூறுதல்

**அலகு – 10 : பள்ளு**

பள்ளு இலக்கிய வகையின் தோற்றமும் வளர்ச்சியும் – இலக்கியக் கூறு – வரிக்கூத்து, உழத்திப்பாட்டு – பள்ளு இலக்கணம் – பெயர்க்காரணம் – பள்ளு இலக்கியத்தில் காணும் நாடகக் கூறுகள் – முதல் பள்ளு இலக்கியம் - முக்கூடற்பள்ளு – ‘வளமை கெழுமை’ தொடங்கி ‘மழை வெள்ளம்’ வரை. (32-52 பாடல்கள்)

**<u>பார்வை நூல்கள் :</u>**


1. ந.வீ.செயராமன், சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1967.
2. மு.சண்முகம்பிள்ளை, சிற்றிலக்கிய வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1971.
3. கு.முத்துராசன், சிற்றிலக்கியச் சிந்தனைகள், தேன்தமிழ் பதிப்பகம், சேலம், 1980.
4. பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள், மணிவாசகர் பதிப்பம், சிதம்பரம், 1984.

# தாள் : காப்பியம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 424** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

தமிழில் காப்பிய இலக்கியங்களின் சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் பயிற்றுவித்தல்.

**அலகு – 1 :**

காப்பியத்திற்கான சமூகப் பின்னணிகள் - மேலைநாட்டுக் காப்பியங்கள் – வடமொழிக் காப்பியங்கள் – தமிழில் காப்பியங்கள் – ஐம்பெரும் காப்பியங்கள் – ஐஞ்சிறுகாப்பியங்கள்.

**அலகு – 2 :**

காப்பியம் பற்றிய திறனாய்வுக் கருத்துகள் – அரிஸ்டாட்டில், ஆபர் கிராம்பி போன்றோரின் கருத்துக்கள் – வடமொழியில் காப்பிய இலக்கணம் – தமிழில் காப்பிய இலக்கணம் – உரையாசிரியர் தம் கருத்துகள் – தமிழ்த் திறனாய்வாளர்கள்தம் கருத்துகள்.

**அலகு – 3 : சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பு முறை – காப்பிய நோக்கம் – கதை நிகழ்ச்சிகள் – கதைகூறும் முறை – நாடகக் கூறுகள் – தொன்மக் கூறுகள் – கிளைக்கதைகள் – கானல் வரி காதை.

**அலகு – 4 : மணிமேகலை**

மணிமேகலையின் காப்பிய அமைப்பு முறை - காப்பிய நோக்கம் – கதை நிகழ்ச்சிகள் – கதைகூறும் முறை – நாடகக் கூறுகள் – தொன்மக் கூறுகள் – கிளைக்கதைகள் – சமயச் செய்திகள் – பௌத்த காப்பியமா? பெண்ணியக் காப்பியமா?– சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட காதை.

**அலகு – 5 : சீவகசிந்தாமணி & பெருங்கதை**

சீவகசிந்தாமணி – பெயர்க்காரணம் – காப்பிய உருவாக்கம் – இலம்பகப் பெயர் அமைப்பு -முக்தி இலம்பகம் – பெருங்கதை – பொது அறிமுகம்.

**அலகு – 6 : நீலகேசி**

நீலகேசி – பெயர்க்காரணம் – பொது அறிமுகம் - காப்பிய உருவாக்கம் – மொக்கல வாதச் சருக்கம்

**அலகு – 7 : பெரிய புராணம்**

பெயர்க்காரணம் – பொது அறிமுகம் - காப்பிய உருவாக்கம் – கண்ணப்ப நாயனார் புராணம்.

**அலகு – 8 :கம்பராமாயணம்**

பெயர்க்காரணம் – காப்பிய உருவாக்கம் –பொது அறிமுகம் - காட்சிப்படலம்

**அலகு – 9 : தேம்பாவணி – சீறாப் புராணம்**

பெயர்க்காரணம் – காப்பிய உருவாக்கம் - பொது அறிமுகம்.

**அலகு – 10 : இருபதாம் நூற்றாண்டுக் காப்பியங்கள்**

ஆட்டணத்தி ஆதிமந்தி – கொடிமுல்லை – தமிழச்சியின் கத்தி - பெயர்க்காரணம் – காப்பிய உருவாக்கம்.

**<u>பார்வை நூல்கள் :</u>**


1) சிலப்பதிகாரம் (உ.வே.சா. பதிப்பு), உ.வே.சா. நூல் நிலையம், சென்னை.
2) மணிமேகலை (பொ.வே.சோமசுந்தரனார்), கழக வெளியீடு, சென்னை.


*****

# தாள் : மார்க்சியமும் இலக்கியமும்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 425** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

மார்க்சியத்தையும் மார்க்சிய இலக்கியக் கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்தி அவற்றைத் தமிழ் இலக்கியத்தில் பொருத்திப் பார்த்தல்.

**அலகு – 1 :**

கார்ல் மார்க்சின் வாழ்க்கை வரலாற்றை விளக்குதல் – மார்க்சின் இளமைக்காலம் – பத்திரிக்கையில் எழுதுதல், பணியாற்றுதல் – மண வாழ்க்கை – பிரான்சு வாழ்க்கை – லண்டன் வாழ்க்கை – மூலதனம் எழுதிய காலங்கள் – கட்சி அறிக்கை வெளியிட்ட காலங்கள் – மார்க்சுக்கும் ஏங்கெல்சுக்குமான தொடர்புகள் – இறுதிக்காலம்.

**அலகு – 2 :**

சமூகவியல் கோட்பாடுகள் – ஒரு சமூகத்தை வரையறை செய்வதற்கான அடிப்படைகள் – பிற சமூகவியல் கோட்பாடுகளிலிருந்து மார்க்சிய சமூகவியல் மாறுபடும் நிலைகள்

**அலகு – 3 :**

இயக்கவியல் பொருள் முதல்வாதம் – முரண்பாடுகளின் ஒற்றுமை – நிலை மறுப்பின் நிலை மறுப்பு – நிலை மறுப்பின் அளவு மாறுபாடும் குண மாறுபாடும்.

**அலகு – 4 :**

வரலாற்றுப் பொருள் முதல்வாதம் – மும்முனைப் போராட்டம் – பொருளாதாரப் போராட்டங்கள் – அரசியல் போராட்டங்கள் – தத்துவார்த்தப் போராட்டங்கள்.

**அலகு – 5 :**

இலக்கியம் – எதார்த்தவாதம் – சோசலிச எதார்த்தவாதம் –பிரதிபலிப்புக் கோட்பாடு (Reflection Theory) – முரண் தர்க்கம்

**அலகு – 6 :**

மேற்கட்டுமானம் – அடிக்கட்டுமானம் – பொருளாதாரச் சுரண்டல் – வர்க்கம் – எதார்த்தம் –விமர்சன எதார்த்தம் – சோசலிச எதார்த்தம் – வர்க்க வேறுபாடுகள் – சமூக முரண்கள் – அரசு, சட்டம், நிலவுடைமை, முதலாளித்துவம்

**அலகு – 7 :**

தமிழ் இலக்கியங்களில் மார்க்சிய சித்தாந்தத்தைப் பொருத்திப் பார்த்தல் – வர்க்க முரண்களை அடையாளம் காணுதல் – இன்குலாப், தணிகைச்செல்வன், கு.சின்னப்பபாரதி, தொ.மு.சி.ரகுநாதன், ச.தமிழ்ச்செல்வன், இராசேந்திரசோழன், ஜெயகாந்தன் போன்ற படைப்பாளர்களின் படைப்புகளை அறிமுகம் செய்தல்.

**அலகு – 8 :**

மார்க்சியத் திறனாய்வாளர்கள் – க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, ஜீவா, நா.வானமாமலை, கோ.கேசவன், எஸ்.தோத்தாத்ரி, அ.மார்க்ஸ், கோவை ஞானி, எம்.ஏ.நு ்மான் போன்றோர்.

**<u>பார்வை நூல்கள் :</u>**


1. கெய்ல்ஓம்லெட் - வர்க்கம் சாதி நிலம், இராசாராம் (மொ.பெ.), கார் முகில் பதிப்பகம், மதுரை – 1988.
2. சரத் பபீல் - சாதி வர்க்க முரண்பாடுகளின் இயங்கியல், சண்முகம் (மொ.பெ.), புறப்பாடு துணை வெளியீடு, சென்னை.
3. சர்மா ஆர்.எஸ். - பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் கல்வி நிலையங்கள் – சில தோற்றங்கள், சோமலே (மொ.பெ.), இந்தியன் கவுன்சில், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 1989.
4. துங்.மா.சே. - கலையும் இலக்கியமும், ராஜமாணிக்கம் (மொ.பெ.), தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1988.

5. நம்பூதிரிபாட்.இ.எம்.எஸ். - இந்திய வரலாறு – ஒரு மார்க்சியக்
கண்ணோட்டம்,
பரமேஸ்வரன்.பி.ஆர். (மொ.பெ.),
சென்னை புக்ஸ்,
சென்னை – 1988.
6. பாஸ்கல்கிஸ்பார்ட்.எஸ்.கே. – சமூகவியலின் அடிப்படைகள்,
நாராயணன். ஜெ., (மொ.பெ.),
தமிழ் வெளியீட்டுக் கழகம்,
சென்னை – 1964.
7. பொகுஸ்லாவ்ஸ்கி.வெ.மொ. – இலக்கியவியல் பொருள் முதல்வாதம்,
வரலாற்றுப் பொருள் முதல்வாதம்,
ஆ.பெ.இ. (மொ.பெ.), முன்னேற்றப் பதிப்பகம்,
மாஸ்கோ – 1978.
8. ரெனவெல்லக், ஆஸ்டின் - இலக்கியக் கொள்கைகள்,
குளோரியா சுந்தரமதி, எஸ்., (மொ.பெ.),
பாரி நிலையம்,
சென்னை, 1966.
9. ஜார்ஜ் தாம்சன் - மனித சமூகச் சாரம்,
கோ.கேசவன் (மொ.பெ.),
சென்னை புக் ஹவுஸ்,
சென்னை – 1981.
10. ஜார்ஜ் தாம்சன் - மார்க்ஸ் ஏங்கெல்ஸ் நூல்கள்,
தொகுதி 1 -12,
ஆ.பெ.இ. (மொ.பெ.),
மாஸ்கோ, 1984.
11. மறைமலை.சி.இ. - மார்க்சியமும் இலக்கியமும்,
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம் – 1996.
12. நடராசன்.,தி.சு. - திறனாய்வுக்கலை அணுகுமுறைகளும்
கொள்கைகளும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை – 1996.
13. பீட்டர் வொர்ஸ்லி - மார்க்சும் மார்க்சியமும்,
பிரமிள் (மொ.பெ.),
லயம் வெளியீடு,
ஊட்டி – 1999.

14. மங்கையர்க்கரசி.சிவ. - இலக்கிய இயக்கங்கள்,
(தமிழ் இலக்கியத்தின் சமூக வரலாறு),
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை – 2004.

15. ரகுநாதன்.தொ.மு.சி. - முற்போக்கு இலக்கிய இயக்கங்கள்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை – 1994.

*****

# தாள் : மானிடவியலும் இலக்கியமும்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 426** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

மானிடவியலை அறிமுகப்படுத்தி, தமிழ் இலக்கியத்தில் அதனைப் பொருத்திப் பார்த்தல்.

**அலகு – 1 :**

மானிடவியலின் தோற்றம் – அரிஸ்டாட்டிலின் கொள்கை – மானிடவியலின் உலகம் தழுவிய வளர்ச்சி.

**அலகு – 2 :**

மானிடவியல் பிரிகளின் அறிமுகம் – உடல் சார் மானிடவியல் – பண்பாட்டு மானிடவியல் – தொல்லியல் – மொழியியல்.

**அலகு – 3 :**

சாதிமுறை – சாதி முறையின் வகைகள் – இந்தியச் சாதிமுறை – சாதிக் கொள்கைகள் – மரபுக் கொள்கை – தொழிற்கொள்கை – சமயக் கொள்கை – அரசியற் கொள்கை – படிமலர்ச்சிக் கொள்கை – குடி ஊழிய முறை.

**அலகு – 4 :**

சமய நம்பிக்கைகளும் வாழ்வியலும் சமயத்தின் தோற்றம் – ஆவியுலகக் கோட்பாடு – உயிரியம் – குலக்குறியியம் – முன்னோர் வழிபாடு – புனிதத் தன்மையை ஏற்படுத்தியுள்ளமை – சடங்கு முறைகள் – மக்கள் வாழ்வில் சமயத்தின் பங்கு.

**அலகு – 5 :**

உணவு ஈட்டுதலும் பரிமாற்ற முறைகளும் – பொருளியல் முறைகள் – பரிமாற்றமும் பகிர்ந்து கொள்ளுதலும் – பொதுப்படியான பரிமாற்றம் – சமச்சீர் பரிமாற்றம் – குலப் பரிமாற்றம் – குடிஊழிய முறை – விருந்துப் பரிமாற்றம் – மௌனப் பரிமாற்றம் – அன்பளிப்புப் பரிமாற்றம் – மறுபங்கீட்டு முறை.

**அலகு – 6 :**

திருமண விதிகள் –தகாப் புணர்ச்சி – தகாப் புணர்ச்சிக் கொள்கைகள் – உளப்பகுப்பாய்வுக் கொள்கை – இளம் பருவம் முதல் ஒன்றாயிருத்தல் கொள்கை – உளவியல் கொள்கை - ஒற்றுமைக்கொள்கை – குடித்தொகையியல் கொள்கை –உட்குழு மணவுறவைத் தவிர்த்தல் கொள்கை – அக மண, புற மண விதிகள் – மணத் துணையைத் தேடும் முறைகள்.

**அலகு – 7 :**

திருமண வகைகள் –ஒரு துணை மணம் – பல துணை மணம் – பல மனைவி மணம் – பல கணவர் மணம் –நாயர்களின் திருமணம் – உலகச் சமுதாயங்களில் திருமணம் – குழு மணம் – மதனி மணமும், மைத்துணி மணமும் – உயர்சாதி மணமும் கீழ்ச்சாதி மணமும் – திருமணப் பொருளியல்.

**அலகு – 8 :**

பண்டைய இலக்கியங்களில் பரிமாற்றக் கொள்கைகள் – பெரிய புராணத்தில் சாதி வகைகள் – சிற்றிலக்கியங்களில் சமய வாழ்வியல்.

**<u>பார்வை நூல்கள் :</u>**


1. பண்பாட்டு மானிடவியல் – பக்தவச்சல பாரதி
2. சங்க இலக்கியம் (சமூக மானிடவியலின் ஆய்வுக் கட்டுரைகள்), சிலம்பு நா.செல்வராசு, அனிச்சம்.
3. பெரியபுராண ஆய்வு மாலை, பெரியபுராண இலக்கிய ஆய்வு மாநாடு, வாரணாசி.
4. மானிடவியல் கோட்பாடுகள் – பக்தவச்சல பாரதி, வல்லினம் வெளியீடு, முதல் பதிப்பு – 2005.
5. திராவிட மானிடவியல் – பக்தவச்சல பாரதி, க.வைஷ்ணவி, காலச்சுவடு பதிப்பகம், 2014, இரண்டாம் பதிப்பு – 2016.
6. பாணர் இன வரைவியல் – பக்தவச்சல பாரதி, அடையாளம் வெளியீடு, 2015.


*****

# தாள் : செம்மொழித் தமிழ்

**பாடத்திட்டம்**

**பாட எண் : TAML 427** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

செம்மொழித் தமிழின் தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் எடுத்துக்கூறுதல்.

**அலகு – 1 : செவ்வியல் : விளக்கமும் வரையறைகளும்**

அறிமுகம் – செவ்வியல் சொற்பொருள் விளக்கம் – செவ்வியல் கருத்து வளர்ச்சி – அகராதிப் பொருள்கள் – செவ்வியல் கலைகள் – செவ்வியல் சித்திரங்கள் – செவ்வியல் இசை – தமிழில் செவ்வியல் என்பதன் விளக்கம் – தமிழ்ச் செம்மொழிக் கோரிக்கை வரலாறு.

**அலகு – 2 : செவ்வியல் கோட்பாடு**

வரையறை – விளக்கம் – கிரேக்க, உரோம இலக்கியப் பார்வையில் தோன்றிய விளக்கங்கள் – தொன்மையுடைமை – தலைமையுடைமை – போலச் செய்தல் – மரபுடைமை – காலப்பகுப்பும் கட்டுப்பாடும் – பல கூறுகளின் இணைவுடைமை – தற்சார்பின்றிருத்தல் – உலகப் பொதுவுடைமை – முன்னோடியாகத் திகழ்தல்.

**அலகு – 3 : செவ்வியல் இலக்கியங்களுக்குரிய பொதுப்பண்புகள்**

கற்பனை – பொருளும் வடிவமும் பொருந்தியமைதல் – காரண காரிய இயைபுடைமை – உத்திகள் – மாந்தர் படைப்பு – செவ்வியல் கவிஞனுக்குரிய பண்புகள் – செவ்வியல் கோட்பாடுகள்.

**அலகு – 4 : உலகச் செவ்வியல் மொழிகள் : அறிமுகம்**

கிரேக்க மொழி – இலத்தீன் மொழி – அரபு மொழி – சீன மொழி – பாரசீக மொழி – ஹீப்ரு மொழி – சமஸ்கிருத மொழி.

**அலகு – 5 : உலகச் செவ்வியல் இலக்கியங்கள் : அறிமுகம்**

கிரேக்க இலக்கியம் – இலத்தீன் இலக்கியம் – எகிப்திய இலக்கியம் – பாபிலோனிய இலக்கியம் – எபிரேய இலக்கியம் – பாரசீக இலக்கியம் – சீன இலக்கியம் – சமஸ்கிருத இலக்கியம்.

**அலகு – 6 : தமிழின் செம்மொழித் தகுதிபாடுகள்**

பரிதமாற்கலைஞரின் கருத்து – டாக்டர் கால்டுவெல்லின் கருத்து – குழந்தைசாமியின் செம்மொழிச் சிந்தனைகள் – கா.சிவத்தம்பியின் வரையறைகள் – ஜார்ஜ் எல்.ஹார்ட்டின் அறிக்கை.

**அலகு – 7 : செம்மொழித் தமிழின் தொன்மை புறச்சான்றுகள்**

பழந்தமிழ் எழுத்துக்கள் – கல்வெட்டுகள் – நடுகற்கள் – காசுகள் – இலச்சினைகளும் மோதிரங்களும் – சில்லுகள்.

**அலகு – 8 : தமிழ் இலக்கியத்தில் செவ்வியல் கூறுகள்**

சங்கத் தமிழில் செவ்வியல் மாண்புகள் – உலகியல் உண்மையும் பொருத்தமான முடிவும் – கட்டுக்குட்பட்ட கற்பனைகள் – இயற்கை வருணனையும் காரண காரிய இயைபும் – சொல்லாட்சி – பொது மனித மாதிரிகள்.

**<u>பாட நூல்கள் :</u>**


1) செ.சாரதாம்பாள், செவ்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 1988.
2) ச.அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, NCBH, சென்னை.


**<u>பார்வை நூல்கள் :</u>**


1. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு சிறப்பு மலர், கோவை, 2010.


*****

# தாள் : இலக்கியத்தில் தொன்மம்

## பாடத்திட்டம்

**பாட எண் : TAML 428** **பாட மதிப்பு : 3 மதிப்புகள் (3 Credits)**

**நோக்கம் :**

தமிழில் தொன்மங்களை அறிமுகப்படுத்தி அவற்றைத் தமிழ் இலக்கியங்களோடு தொடர்பு படுத்தல்.

**அலகு – 1 :**

தொன்மம் – சொற்பொருள் விளக்கம் – தொல்காப்பியம் – தொன்மை – பிற விளக்கங்கள்.

**அலகு – 2 :**

புராணவியல் - செவிவழிக் கதைகள் – பழமரபுக் கதைகள் – சரித்திரக் கதைகள் – இறைமைக் கதைகள் – பரம்பரைக் கதைகள் – வேறுபாடும் பிறவும்.

**அலகு – 3 :**

இலக்கியத்தில் பல கூறுகள் – தொன்மம் இடம்பெறுதல் – பயன்பாடு – தேவை – உத்திகள் – ஏனைய கூறுகள்.

**அலகு – 4 :**

தொன்மமே இலக்கியமாவது – மூலப்பொருள் – மாற்றங்கள் – ஏற்பு - நடைமுறைச் செய்திகள்.

**அலகு – 5 :**

தொன்மங்களின் வகைகள் – நிலவியல் – சமயப் பின்னணி – தொழில் – மொழி - குழுக்கள் – நம்பிக்கைகள் – பிற.

**அலகு – 6 :**

தமிழ் நிலம் – தொன்மங்கள் – வளர்ச்சி – கலப்புகள் – மாற்றங்கள் – பின்புலங்கள் – மக்களின் மனப்பாங்கு – கடவுள் (முருகன் போன்றோர்) – மாந்தர் (கண்ணகி போன்றோர்).

**அலகு – 7 :**

இந்தியத் தொன்மம் – பொதுநிலை – மொழியாக்கம் – கலப்புறு நிலை – இதிகாசங்கள் – சகுந்தலை கதை – அரிச்சந்திரன் கதை – பிற.

**அலகு – 8 :**

உலகத் தொன்மம் – ஆதாம் ஏவாள் – ஏசுநாதர் – சமயச் சார்புத் தொன்மங்கள் – தொன்மத்தின் பழமை – மீட்டுருவாக்க முயல்வுகள் – கோட்பாடுகள் – ஆய்வுகள்.

**<u>பார்வை நூல்கள் :</u>**


1. நார்த்ராப் ப்ரை – இலக்கியத்தில் தொல்படிவங்கள்
2. தொன்மத் திறனாய்வு – க.பஞ்சாங்கம், அன்னபம் வெளியீடு, தஞ்சாவூர்.
